# ஏழாம் நாள்

## பிரபஞ்சத்தின் பல்வேறு தேவைகளுக்காகச் செபிப்போம்...

**முன்னுரை:**

நதி தன்நீரைத் தானே குடிப்பதில்லை
மரம் தன் கனியைத் தானே உண்பதில்லை
மலர் தன் தேனைத் தானே சுவைப்பதில்லை
விளக்கு தன் ஒளியைத் தானே வைத்துக்கொள்வதில்லை.

ஆம் பிறருக்குப் கொடுத்து மகிழ்வதில் இன்பம் காண்பது இயற்கை மட்டுமல்ல. காலத்தைக் கடந்து வாழ ஆசிக்கும் மனிதர்களும் தான். ஆனால் மனிதன் மட்டும் ஏன் சற்று வித்தியாசமாக, வினோதமாக வாழ ஆசிக்கிறான். இப்பிரபஞ்சம் நமக்குச் சுட்டிக்காட்டுவது ஒன்றே ஒன்று தான். அது அன்பு. அந்த அன்பு நம்மில் பிறப்பெடுக்கும்போது மனிதன் தன்னையும் தன்னிடம் உள்ளவற்றையும் கொடுத்து வாழ்வான். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கணக்கெடுப்பு பிரிவின்படி உலக மக்கள் தொகையானது இந்த ஆண்டு இறுதியில் 8 பில்லியன் என்று கூறப்படுகிறது. இதில் ஒரு நாளைக்கு உணவு இல்லாமல் படுக்கைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 828 மில்லியன். வேலையில்லாமல் இருப்பவர்கள் 207 மில்லியன். குழந்தைத் தொழிலாளிகள் 9 மில்லியன். இதற்கு மேலாக காடுகளை அழித்தல், உயிரினங்களை அழித்தல் போன்ற செயல்பாடுகள் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இப்பேர்பட்ட மனிதத்திற்கு எதிராக, இயற்கைக்கு எதிராக, இப்பிரபஞ்சத்திற்கு எதிராக நடக்கும் யுத்தங்களை முறியடிக்கப் பல்வேறு தேவைகளுக்காக செபிக்க இந்த ஏழாம் நாள் நவநாள் நம்மை அழைக்கிறது. சட்டம் எழுதப்பட்டும் சரியாய் பயன்படுத்தாமல் ஆண்டாண்டு காலமாய் பேசப்பட்டு செயல்படுத்தாமல் இருக்கும் பெண்ணடிமை ஒழிப்பும், குழந்தைத் தொழிலாளர் மேலும் தீவிரவாதம், நாடுகளுக்கிடையே சமாதானமின்மை, வறுமை, நோய், திருநங்கைகளின் அவலநிலை, பெண் பாதுகாப்மின்மை போன்ற நிலைகள் ஒழியவும் எல்லாருக்கும் எல்லாம் கிடைத்து இன்பமாய் இப்பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க இறையருள் வேண்டி தன்னை உருக்கி ஒளிகொடுக்கும் மெழுகுதிரியை அன்னையின் பதம் சமர்ப்பித்து இணைவோம் இந்த நவநாளில்.

**திருப்பா:**

உலகின் உண்மை ஒளியாம் கிறிஸ்துவை
எமக்காய் தந்த கன்னியே அன்னையே
உள்ளத்தை உவப்புடன் எமக்கு அளித்து
உலகின் மாண்பைக் காத்திட்ட அன்னையே!

எதிர்மறை எண்ணத்தை யாம் தவிர்த்து
நேர்மறை எண்ணத்தில் எம்மை வளர்ப்பாயே!
அச்சம் நீங்கி அமைதியில் வாழ்ந்திட
அனைவருக்கும் உமதாசீர் அருள்வாயே!

வேலையின்றித் தவிக்கும் விளிம்பு மக்கள்
வேலைவாய்ப்புப் பெற்று விருப்பமுடன் வாழ
வேண்டிய சூழலை அமைத்துத் தருவாயே
வேண்டாத தீமைகள் யாவையும் விரட்டுவாயே!

பிறரின் தேவையை முன்பே அறிந்து
பரமன் இயேசுவிடம் பரிந்துரை செய்தவரே
ஒளியின் வழியில் நாளும் நடந்திட
உள்ளொளி தருவாய் உம்மக்கள் எமக்கே! ஆமென்.

## <u>திருப்பாடல் : 1</u>

**<u>முன்மொழி</u> : அண்டசராசரங்களை ஆண்டு வழிநடத்தும் ஆண்டவரைத் தம்முள் ஏற்ற தாய்மையே உம்மை வாழ்த்துகிறோம்.**

செபம் என்பது இறைத்தன்மையால் நன்மைகள் செய்வதும் பிறர்வாழ தன்னைக் கரைப்பதும் என நாம் கருத்தில் கொள்ளலாம். தூய அவிலா தெரசாள் அவர்கள் ஆன்மீக செபவாழ்வில் வளர்ச்சி காண சில தந்திரங்களைக் கையாளச் சொல்கிறார்.

- தம் மனதை இறைத்தந்தையின் சித்தத்திற்கு முற்றிலும் கையளித்து விடுதல்.
- நம்மீதும் நம் ஆன்மீக வலிமையின் மேலும் நம்பிக்கை வைக்கலாகாது.
- அற்ப பாவமாயினும் அதனை அகற்றி வாழ்தல். இவைகளே நாம் பின்பற்ற வேண்டியவை. நம்முடைய சொந்த முயற்சியால் நம்மால் செபிக்க இயலாது. செபிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எழுப்புவது கூட இறைவனின் செயலாகும். ஆகவே செபமே நம் வாழ்வின் மையம், ஆணிவேர். இவற்றைக் கொண்டு நம் வாழ்வைக் கட்டியெழுப்பும் போது பிறரில் இறைவனைக் காண்கிறோம். இப்பேர்பட்ட செபத்தை நம் வாழ்வின் நங்கூரமாக கொண்டு மனித இனத்திற்கு எதிராக நடந்து கொண்டிருக்கின்ற அவலச் செயல்கள் நீங்கிட மனிதன் தனது சுயநலத்தால் பாழ்படுத்திய இந்த பிரபஞ்சத்தை மீண்டும் புதுப்பித்து புத்துயிர் பெற நமது நல்ல செப அலைகளை ஆசீர்வாதங்களை இப்பிரபஞ்சத்திற்கு அனுப்புவோம். சில நேரம் நமது கண்களை மூடி மனதை ஒருமுகப்படுத்தி அமைதியில் **"வாழ்க வையகம் பெருகட்டும் பேரன்பு"** என்ற இறைசக்தியை ஒருமித்த மனதோடு 10 முறை சொல்வோம்.

## **<u>திருப்பாடல் : 2</u>**

**<u>முன்மொழி</u> : சமூக அவலங்களையும், சமூக நீதிகளையும் துணிவுடன் எதிர்கொண்ட புரட்சிப்பெண்ணே! உம் புரட்சிக்கனலை எம்மில் விதைத்திடுவாய்.**

**அழகான கவிதை ஒன்றுண்டு**

**“முள்கூட்டில் அமர்ந்தாலும்**

**காக்கைகள் காலணி அணிவதில்லை”.**

ஒவ்வொரு உயிரையும் கடவுள் ஆசீர்வதிக்கின்றார். எங்கோ மழை பெய்து, நிலத்தில் ஒருவர் விதைக்கின்றார். அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வருகின்றது. இது தான் இறைவனின் படைப்பில் உள்ள விந்தையாகும். நிலத்தைப் பதப்படுத்துகிறோம், பக்குவப்படுத்துகிறோம், நீர் பாய்ச்சுகிறோம், களை எடுக்கிறோம், ஆனால் உயிர் கொடுப்பதில்லை. உயிர் கடவுளால் மட்டுமே கொடுக்கப்படுகிறது. நமக்கும் உயிர்கொடுத்துள்ளார், உயிர் ஆற்றல்களைக் கொடுத்துள்ளார். இந்த ஆற்றல்களைப் பயன்படுத்தி பல்வேறு தேவைகளில் இருப்போருக்கு நாம் உதவிட நமக்கு இறைவன் நிறைவான அருளைத் தரவும் இறையரசுப் பணியை இனிதே ஆற்றிட இப்பாடலில் இணைவோம்.

**பாடல்** : இன்பக் கனவொன்று நான் கண்டேன்

## **<u>திருப்பாடல் : 3</u>**

**<u>முன்மொழி:</u> தேடிச்சென்று அடைக்கலம் நல்கும் அடைக்கலத்தாயே உம் வழி அடைக்கலம் தந்திட அருள்வாயே.**

அன்பின் பிறப்பிடமாய் இந்த பிரபஞ்சத்தைக் காத்து இறைவனுக்கும் நமக்கும் அன்பின் பாலமாய் விளங்கும் அன்னை மரியைப் போல அன்பின் பலசாலிகளாய் பிரபஞ்சத்தை ஆட்சி செய்ய வரம் வேண்டியவர்களாய் இச்சிறுகதைக்கு செவிமடுப்போம்.

ஒரு நாள் சாவியைப் பார்த்து சுத்தியல் கேட்டது. உன்னைவிட நான் வலிமையானவனாக இருக்கிறேன். ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன். ஆனால் நீ திறந்து விடுகிறாயே அதெப்படி? அதற்கு சாவி சொன்னது “நீ என்னை விட பலசாலிதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய். ஆனால் நான் பூட்டின் இதயத்தைத் தொடுகிறேன் என்றதாம்.

ஆம்! அன்பு மட்டுமே இதயங்களை வெல்லும். உறவுகளை பலப்படுத்தும். தேவையில் இருப்போரைத் தேற்றும். ஆக அன்பாய் இருப்போம். அன்பாய் வாழ்வோம்.

**இறைவார்த்தை :** உரோமையர் 15: 1-2

## <u>கன்னிமரியின் பாடல் :</u>

**<u>முன்மொழி:</u> அண்டிவந்தோரை அரவணைத்து வாழ்வளிக்கும் அன்னையே போற்றி!**

சின்னரும் இறைவனை எந்தன் இதயம் எந்நாளும் வாழ்த்தி வணங்கியே மகிழும். தாழ்நிலை அடிமைக்குத் தனிப்பெரும் கருணையைக் கண்களில் இறக்கினார். தூயவர் என்றே அவர் பெயர் துலங்கும். கலங்கிடும் கண்கள் அவரைக் கண்டே வியந்து வணங்கும். இவ்வாறு தன் புரட்சிப்பாடலால் தூயவனைப் பொழுதும், தொழுதும் வாழ்த்தி வணங்கிய தூயதாயை நம் அடைக்கலத்தாயை வாழ்த்திப் போற்றுவோம்.

**பாடல் :** ஆர்பரித்து பாடுதே...

## <u>பல்வேறு தேவைகளுக்காக செபிப்போம்:</u>

கடவுளே கன்னிமரியின் வயிற்றில் பிறக்கின்றார். வானதூதர்கள் வாழ்த்துப்பாடல் பாடுகின்றார்கள். இடையர்கள் போற்றிப் புகழ்கின்றார்கள். இதையெல்லாம் கண்ட அன்னைமரியாள் பெருமைக்கொள்ளவில்லை. ஆனந்தம் கொள்ளவில்லை. பதவியும், புகழும், பெருமையும் தேடிவரும்பொழுது அதில் சுகம் காணாது தேவை இருக்கின்ற இடத்தை நோக்கி பாய்கின்ற தெளிந்த நீரோடையாய் பல்வேறு தேவையில் இருப்போரை தேடிச்சென்ற அன்னைமரியின் வழியாக நம் மன்றாட்டுகளைச் சமர்ப்பிப்போம்.

- **திருச்சபையில் அன்னை மரியாள்:**

**திருத்தூதர்கள் அன்னைமரியாவோடு இணைந்து ஒரே மனதோடு இறைவனிடம் வேண்டி கொண்டிருந்தார்கள். (திப 1: 13-14)**

இயேசுவின் மரணத்திற்கு பிறகு சிதறுண்ட திருத்தூதர்களை ஒருங்கிணைத்து நல்வழிகாட்டிய அடைக்கலத்தாயிடம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் ஒரே உள்ளத்தோடு வாழ்ந்திட அருள் வேண்டுவோம். மதம், ஜாதி, அதிகாரம், பதவி இவற்றால் நாட்டைப் பிளவுப்படுத்துகிற தீவிரவாத நிகழ்வுகளுக்காய் சிறப்பாக உக்ரைன்-ரஷ்யா, இலங்கை மற்றும் வெப்பக்காற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஐரோப்பா நாடுகளைப் போல பல்வேறு நாடுகளின் பிரச்சனைகளுக்காகச் செபிப்போம்.

- **சமூகத்தில் அன்னை மரியாள்**

**இயேசுவின் தாய் அவரை நோக்கி, “திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது” என்றார். (யோ 2:1-4)**

சமூகத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் தன்னை இணைத்துக் கொண்ட அன்னை மரியாளைப் போல நாம் வாழ்கின்ற சமூகத்தில் பெண்கள், சிறு குழந்தைகளுக்கு எதிராக நடக்கின்ற வன்கொடுமைகள் நீங்கிட அன்னைமரியாள்

வழியாக இயேசுவிடம் மன்றாடி இவர்களின் வாழ்வு பல்வேறு அருள்வரங்களால் நிரம்பி புதுவாழ்வு பெற்றிட மன்றாடுவோம்.

- **உறவுகளில் அன்னை மரியாள்:**

**அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார் (லூக் 1: 39-40)**

கடவுளுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவைப் புதுப்பிக்க உறவின் பாலமாய் அவதரித்த இறைமகனைக் கருவில் தாங்கி உறவைத் தேடிச்சென்ற அன்னை மரியாளின் வழியில் உறவுகளால் கைவிடப்பட்டு, தனிமையில் வாடுகின்ற முதியவர்கள், கைவிடப்பட்டவர்கள், விதவைகள், அகதிகள், அனாதைகள், திருநங்கைகள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்.

- **கல்வாரி மலையில் அன்னை மரியாள்:-**

**சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். (யோ 19:25)**

கல்வாரி மலையில் உடல் உள்ள ஆன்மீக வேதனையால் வேதனையுற்று தவித்த இறைமகனின் காலடியில் நின்று அடைக்கலம் தந்திட்ட அடைக்கலத்தாயின் வழியில் நமது குழுமத்திலும், பணிபுரியும் நிறுவனங்களிலும், நம் பணியாற்றும் பங்குத் தளங்களிலும் உடல் உள்ள ஆன்மீக நோயினால் வேதனையுறும் ஒவ்வொருவரையும் நினைவு கூர்ந்து மன்றாடுவோம்.

**<u>இறுதி செபம்:</u>**

எங்களைப் பேரன்போடு பெயர்ச்சொல்லி அழைத்த தந்தையே! அன்னைமரியாளைப் போல தேவையில் இருப்போருக்கு குறிப்பறிந்து உதவிசெய்து இப்பிரபஞ்சப் பேரன்பில் அனைவரோடும் ஒருங்கிணைந்து விண்ணகத்தின் முன்சுவையை இம்மண்ணகத்தில் கண்டிட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.